பருத்தி இறக்குமதிக்கான சுங்க வரி முழுமையாக ரத்து: மத்திய அரசு உத்தரவு

புதுடெல்லி, மே.31

5 மாதங்களுக்கு அமலில் இருக்கும் வகையில் பருத்தி இறக்குமதிக்கான சுங்க வரியை முழுமையாக ரத்து செய்து மத்திய அரசு அறிவித்துள்ளது.

இந்தியா உலகின் மிகப்பெரிய பருத்தி உற்பத்தியாளர்களில் ஒன்றாக இருந்தாலும், ஆடம்பர ஆடைகள் மற்றும் உயர்தர நூல்களைத் தயாரிக்கப் பயன்படும் நீள இழை பருத்தி போதிய அளவில் விளைவதில்லை. இதற்காக எகிப்து மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளை இந்தியா நம்பியுள்ளது. பருத்தி அறுவடை அக்டோபர்நவம்பரில் தொடங்கி மார்ச் மாதத்துடன் முடிந்துவிடும்.

ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான மாதங்களில் உள்நாட்டு சந்தையில் பருத்தி இருப்பு குறைந்து, விலை கடுமையாக உயரும். உள்நாட்டுப் பருத்தி வியாபாரிகள் செயற்கையாக விலையை உயர்த்தும்போது, இறக்குமதி பருத்தி அந்த விலையைக் கட்டுக்குள் வைக்க உதவுகிறது.

மத்திய நிதி அமைச்சகம் வெளியிட்டுள்ள புதிய அறிவிப்பின்படி, உள்நாட்டு ஜவுளித் துறையை மேம்படுத்த பருத்தி இறக்குமதி மீதான அனைத்து சுங்க வரிகளும் 5 மாதங்களுக்கு முழுமையாக ரத்து செய்யப்பட்டுள்ளன. மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியம் வெளியிட்டுள்ள அதிகாரப்பூர்வ அறிவிப்பின்படி. இந்த தற்காலிக வரிவிலக்கு இன்று (திங்கட்கிழமை) முதல் அக்டோபர் 31 ந்தேதி வரை அமலில் இருக்கும்.

இதன்மூலம் பருத்தி இறக்குமதிக்கான 11 சதவீதம் அடிப்படை சுங்க வரி மற்றும் வேளாண் உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு வரி ஆகிய இரண் டும் முழுமையாக நீக்கப்பட்டுள்ளன.

தற்போதைய ஈரான் போர்ச் சூழலால் சர்வதேச அளவில் வினியோகச்சங்கிலி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் ஏற்பட்டுள்ள மூலப்பொருள் பற்றாக்குறையைப் போக்கி, உள்நாட்டு ஜவுளித் தொழிலுக்குப் போதிய பருத்தி கிடைப்பதை உறுதி செய்ய இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தற்காலிக விலக்கு நூல், துணி மற்றும் ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் சிறு மற்றும் நடுத்தர ஜவுளி ஆலைகளின் உற்பத்திச் செலவைக் கணிசமாகக் குறைக்கும்.

இறக்குமதி வரி நீக்கப்பட்டாலும், இந்திய பருத்திக் கழகம் வழங்கும் குறைந்தபட்ச ஆதரவு விலை மூலம் உள்நாட்டுப் பருத்தி விவசாயிகளின் நுகர்வு மற்றும் வருவாய் தேவைகள் தொடர்ந்து பாதுகாக்கப்படும் என அமைச்சகம் உறுதி அளித்துள்ளது.

கட்டிடம் – திட்ட அனுமதிகளை அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் 24 நாட்களுக்குள் வழங்க தமிழக அரசு உத்தரவு

சென்னை, மே.31

கட்டிட மற்றும் திட்ட அனுமதிகளை அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் குறிப்பிட்ட காலவரையறைக்குள் வழங்க வேண்டும் என்று தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து அனைத்து மாநகராட்சி, நகராட்சிகளுக்கு தமிழக அரசு பிறப்பித்துள்ள உத்தரவில் கூறப்பட்டு இருப்பதாவது:

உள்ளாட்சி அமைப்புகள் மூலம் திட்ட மற்றும் கட்டிட அனுமதிகள் வழங்கப்படும்போது வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யப்பட வேண்டும். அவை குறிப்பிட்ட காலவரையறைக்கு உட்பட்டு, உயர் அதிகாரிகளின் கடுமையான கண்காணிப்புடன் வழங்கப்பட வேண்டும். இதில் பொதுமக்களுக்கு எவ்வித சிரமமும் ஏற்படக்கூடாது. அந்தவகையில், கட்டிய அனுமதிக்காக தரப்பட்ட விண்ணப்பங்கள், பெறப்பட்ட தேதியிலிருந்து காலவரிசைப்படி செயலாக்கப்பட வேண்டும்.

முதலில் வருவோருக்கு முதலில் முன்னுரிமை என்ற முறை கண்டிப்பாகப் பின்பற்றப்பட வேண்டும்.

இணையவழியில் விண்ணப்பம் பெறப்பட்ட தேதியிலிருந்து 5 வேலை நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட இடத்திற்குச்சென்று களஆய்வு மேற்கொள்ள வேண்டும். களஆய்வு முடிந்த பிறகு 2 நாட்களுக்குள் ஆய்வு அறிக்கையை யுடிஐஎஸ் இணையதளத்தில் உள்ளீடு செய்து பதிவேற்ற வேண்டும்.

மாநகராட்சி கமிஷனர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள், இந்த களஆய்வு அறிக்கை பதிவேற்றப்பட்ட தேதியிலிருந்து 5 நாட்களுக்குள் சரிபார்க்க வேண்டும். அதாவது, விண்ணப்பித்ததில் இருந்து 12 நாட்களுக்குள் சரிபார்ப்பு பணி முடிந்திருக்க வேண்டும்.

கூடுதல் விவரங்கள் ஏதேனும் தேவைப்பட்டால், ஆய்வு செய்த 48 மணி நேரத்திற்குள் ஒற்றைச்சாளர இணையதளம் வழியாக மட்டுமே அதற்கான கோரிக்கையை அனுப்ப வேண்டும். பொறியாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகள், இணையவழி சமர்ப்பிப்புகளை மட்டுமே ஏற்றுக்கொள்ள வேண்டும். அச்சிடப்பட்ட ஆவணங்களின் நகல்களை கேட்கக்கூடாது.

ஆவணங்கள் சரியாக இருப்பதாகக் கண்டறியப் பட்டால், அடுத்தகட்ட நகர்வுக்கு சென்று விட வேண்டும்.

கோரப்பட்ட விவரங்களை இணையவழி மூலம் விண்ணப்பதாரர் சமர்ப்பிப்பதற்கு 7 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். ஆவணங்கள் இணைய வழியில் சமர்ப்பிக்கப்பட்டு, அவை திருப்திகரமாக இருப்பதாகக் கண்டறியப்பட்டதும், இணையதள வாயிலாகக் கட்டணக் கணக்கீடு மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேலும், அனைத்துச் செல்லத்தக்க ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்ட 3 வேலை நாட்களுக்குள், தகுதிவாய்ந்த அதிகாரி, திட்ட அனுமதி விண்ணப்பத்திற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும். அதாவது, விண்ணப்பித்த 24 நாட்களில் இது கிடைத்துவிட வேண்டும்.

மேலும், டி.டி.சி.பி. அல்லது சி.எம்.டி.ஏ.வினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்ட அனுமதி விண்ணப்பங்களுக்கான கட்டிட அனுமதியை 7 நாட்களுக் குள் வழங்க வேண்டும். களஆய்வு தேவையில்லை.

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பிற்காலத்தில் தவறானவை எனத் தெரியவரும் பட்சத்தில், கட்டுமானப் பணிகளை நிறுத்துவதற்குரிய நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரி எந்நேரத்திலும் மேற்கொள்ளலாம்.

அரசின் அறிவுறுத்தல்கள் எதையேனும் மீறி, நகராட்சி மற்றும் மாநகராட்சி அதிகாரிகள். விண்ணப்பதாரர். கட்டிய உரிமையாளர் அல்லது பதிவு பெற்ற பொறியாளர்கள், கட்டிடக்கலைஞர்களை நேரடியாகத் தொடர்புகொண்டால், மிகத் தீவிரமான விஷயமாகக் கருதப்படும். அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பணியிட மாற்றம்

சென்னை கலெக்டராக மாலதி ஹெலன்: தமிழக அரசு உத்தரவு

சென்னை, மே.31

தமிழக அரசு நேற்று முன்தினம் 40 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை பணியிட மாற்றம் செய்து உத்தர விட்டு இருந்தது. இந்த நிலையில் சென்னை கலெக்டராக மாலதி ஹெலன் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து தலைமைச் செயலாளர் சாய் குமார் வெளியிட்ட அரசாணையில் கூறப்பட்டு இருப்பதாவது:

மக்கள் பவனில் தமிழக கவர்னரின் முதன்மை செயலாளராக இருந்த கிர்லோஷ் குமார். வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத் துறை முதன்மை செயலாளராக மாற்றப்பட்டார். சமூகநலன் கூடுதல் இயக்குனர் சரண்யா அரி, பெரம்பலூர் மாவட்ட கலெக்டராக நியமிக்கப்பட்டார். பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் மிருணாளினி, அரியலூர் மாவட்ட கலெக்டராக இடமாற்றம் செய்யப்பட்டார்.

செங்கல்பட்டு மாவட்ட முன்னாள் கலெக்டர் மாலதி ஹெலன், சென்னை மாவட்ட கலெக்டராக நியமிக்கப்பட்டு உள்ளார். கோவை மாநகராட்சி கமிஷனர் சிவகுரு பிரபாகரன், ராமநாதபுரம் மாவட்ட கலெக்டராக இடமாற்றம் செய்யப்பட்டார். தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க இணை மேலாண்மை இயக்குனர் எஸ்.கவிதா. திருவள்ளூர் மாவட்ட கலெக்டராக இடமாற்றம் செய்யப்பட்டார்.

மதுரை மாநகராட்சி கமிஷனர் சித்ரா விஜயன், சென்னை மாநகராட்சி மண்டல துணை கமிஷனராக (வடக்கு) மாற்றப்பட்டார். பொதுத்துறை துணை செயலாளர் வீர்பிரதாப் சிங், திருச்சி மாநகராட்சி கமிஷனராக நியமிக்கப்பட்டார். சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரிய செயல் இயக்குனர் கவ்ரவ்குமார், மதுரை மாநகராட்சி கமிஷனராக மாற்றப்பட்டார்.

சென்னை மாநகராட்சி மண்டல துணை கமிஷனர் (வடக்கு) கட்டா ரவி தேஜா, கோவை மாநகராட்சி கமிஷனராக நியமிக்கப்பட்டார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

ஈஸ்ட்கோஸ்ட் ஸ்டீல் லிமிடெட்

CIN No. L27109PY1982PLC000199

பதிவு அலுவலகம்: பிளாட் எண்.A-123, ராயல் டென் அபார்ட்மெண்ட்ஸ், எண்.16, அருள்தீசன் தெரு, பழனிராஜா உடையார் நகர், லாஸ்பேட்டை, பாண்டிச்சேரி 605 008

Tel: 022-40750100 I **Fax:** 022-22044801 I **Email:**esl@eastcoaststeel.com | **Web :** www.eastcoaststeel.com

31 மார்ச், 2026ல் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தனியான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகள் அறிக்கை சுருக்கம்

(ரூ. லட்சத்தில், வேறு இல்லாதபட்சத்தில்)

வ. எண்	விவரங்கள்	முடிந்த காலாண்டு			முடிந்த ஆண்டு	
		31 மார்ச் 2026 (தணிக்கை செய்யாதது)	31 டிசம்பர் 2025 (தணிக்கை செய்யாதது)	31 மார்ச் 2025 (தணிக்கை செய்யாதது)	31 மார்ச் 2026 (தணிக்கை செய்தது)	31 மார்ச் 2025 (தணிக்கை செய்தது)
1	மொத்த வருமானம் (நிகரம்)	1,737.64	31.92	346.94	1,855.89	1,619.13
2	காலத்திற்கான நிகர லாபம்/ (நஷ்டம்) (வரிக்கு மற்றும் விலக்கு அயிட்டங்களுக்கு முன்)	37.50	10.55	(9.40)	72.12	43.76)
3	காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரிக்கு முன் மற்றும் விலக்கு அயிட்டங்களுக்கு பின்)	37.50	10.55	(9.40)	72.12	(43.76)
4	காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி மற்றும் விலக்கு அயிட்டங்களுக்கு பின்)	30.38	7.81	11.79	57.67	(15.32)
5	காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (வரிக்கு பின் காலத்திற்கான லாபம்/ (நஷ்டம்) மற்றும் வரிக்கு பின் இதர விரிவான வருமானம்)	24.67	7.81	12.45	51.96	(14.66)
6	செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (ஒரு பங்கின் முக மதிப்பு ரூ. 10)	539.65	539.65	539.65	539.65	539.65
7	இதர சமம் (கடந்த தணிக்கை செய்யப்பட்ட இருப்புநிலை அறிக்கையின்படி)	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது	1,435.50	1,383.54
8	பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் (இபிஎஸ்) ஒன்றின் முகமதிப்பு ரூ. 10/– (வருடாந்திரமல்ல)					
	i) அடிப்படை இபிஎஸ்	0.56	0.14	0.21	1.07	(0.28)
	ii) டைலூட்டட் இபிஎஸ்	0.56	0.14	0.21	1.07	(0.28)

குறிப்பு:

1. பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கு நடைமுறைகள் மற்றும் கோட்பாடுகள் மற்றும் கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 133ன் கீழ் பரிந்துரைக்கப்பட்ட கம்பெனிகள் (இந்திய கணக்கியல் தரநிலைகள்) விதிகள் 2015ன்படி (இந்த் ஏஎஸ்) இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.
2. SEBI (பட்டியல் மற்றும் இதர வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சில் தாக்கல் செய்யப்பட்ட காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ்சின் இணையதளம் www.bseindia.com, மற்றும் கம்பெனியின் இணையதளம் www.eastcoaststeel.comல் உள்ளது.
3. மேற்கண்ட முடிவுகள் தணிக்கை குழுவால் பரிசீலனை செய்யப்பட்டு பரிந்துரைக்கப்பட்டு 29 மே 2026 அன்று நடைபெற்ற இயக்குனர் குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இடம் : மும்பை
தேதி : 29 மே, 2026

ஈஸ்ட் கோஸ்ட் ஸ்டீல் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/-
பிரித்விராஜ் எஸ். பாரிக்
தலைவர் மற்றும் இயக்குனர்
(DIN : 00106727)

LARSEN & TOUBRO GROUP EMPLOYEES' COOPERATIVE THRIFT & CREDIT SOCIETY LIMITED

REGD NO. MSCS/CR-27/92

TC-1, First Floor, L&T Construction Campus,
Mount Poonamallee Road, Manapakkam, P.B. No 979,
Chennai 600089, Email: Society@lntecc.com

ELECTION GENERAL BODY MEETING NOTICE

Present: Tmt. Rashmi Siddharth Zagade, IAS.,
District collector/ Returning Officer

By virtue of the powers vested with me as Returning Officer upon appointment by the cooperative Election Authority vide their order election no. 21/2026-27, dated 26th May 2026, it is hereby notified that an ELECTION GENERAL BODY MEETING will be held at 27/07/2026 at L&T Construction Campus, Manappakkam, Chennai- 600089 to ELECT DIRECTORS (8) for the Board of Directors to elect 8 (Eight) Directors for the term 2026-2031 as per the schedule. All members are expected to attend this Election General Body Meeting and they are eligible to contest and vote in the Election as per the Condition laid down in MSCS (Amendment) Act 2023 and Society Bye-Laws.

Election Program Rule 19 (H) (2)
Annexure to the letter No. CEA - 12011/397/2025 dated 26.05.2026

(A) General Information	
Name of MSCS	Larsen & Toubro Group Employees' Co-operative Thrift and Credit Society Limited, Regd. No. MSCS/CR-27/92 (Multi-State), Mount Poonamallee Road, Manapakkam, Chennai, Tamil Nadu - 600089, Contact: 2252 2201/ 2252 2437. E-mail: society@lntecc.com, Web: https://lnt-society.intelligrow.co/selfservice/#!/login
Name & Contact of Secretary	Mr. S. P. Suresh Kumar, Phone no: 9840942095
Registration Number	MSCS/CR-27/92
Returning Officer	Tmt. Rashmi Siddharth Zagade, IAS.,
Post for which election being held	Board of Directors -8 (General-5, Women-2, SC/ST -1)
Area of operation	Tamil Nadu, Kerala, Karnataka, Seemanthara (Andhra Pradesh), Telangana, Union Territories of Pondicherry.
Regular Member	7602
Pooling Booth	6 Pooling Booths, One in the State of Tamil Nadu, One in the state of Andhra Pradesh, One in the state of Telangana, One in the UT of Puducherry, One in the state of Karnataka, and One in the state of Kerala may be set up.

(B) Election Program for Board of Directors

Sl.No	Particulars	Date	Time
1	Publications of Provisional List of Members/ Delegates, Eligible to Vote	15th June 2026 (Monday)	By Evening
2.	Time Window for Raising Objection to the Provisional List	16th to 19th June, 2026 (Tuesday to Friday)	11:00 AM to 3:00 PM
3.	Scrutiny of objection received to the Provisional List (If any)	22nd to 26th June, 2026 (Monday to Friday)	11:00 AM to 3:00 PM
4	Publication of Final list of Members/ Delegates, Eligible to Vote	27th June, 2026 (Saturday)	By Evening
5	Issue and Filing of Nomination form	6th to 9th July 2026 (Monday to Thursday)	11:00 AM to 3:00 PM
6	Publication of List of Nominations Received	9th July 2026 (Thursday)	By 5:00 PM
7	Scrutiny of Received Nomination Forms	10th July 2026 (Friday)	11:00 AM onwards
8	Publication of List of Valid Nominations	10th July 2026 (Friday)	By 5:00 PM
9	Withdrawal of Nominations	11th July 2026 (Saturday)	11:00 AM to 3:00 PM
10	Publication of Final List of Contesting Candidates	11th July 2026 (Saturday)	By Evening
11	Date of Polling, if Necessary	27th July 2026 (Monday)	8:00 AM to 4:00 PM and all those who have entered the polling station at 4:00 PM or before should be allowed to cast vote.
12	Counting of votes	30th July, 2026 (Thursday)	8:00 AM onwards
13	Submission of Forms 19M with recommendation for seeking approval of CEA before declaration of result of BOD	30th July 2026 (Thursday)	
14	Declaration of Results of Board of Directors	After approval of Cooperative Election Authority, New Delhi on Format 19 M	

(C) Election Program of Office Bearer (After Declaration of Result of Board Members' Election)

1	Annoucement of Election Schedule	6th August 2026 (Thursday)	
	I.Time window for filing nominations	09:30 AM to 11:30 AM	
	II.Scrutiny of nomination papers	12:30 PM to 2:00 PM	
	III.Time and date for withdrawal	2:00 PM to 4:00 PM	
	IV.Display of list of the contesting candidate and schedule of election	By Evening	
2	Meeting of Newly Constituted Board & Publication of List for valid Nominations, Polling (if required)	7th August 2026 (Friday)	11:00 AM Onwards
3	Declaration of Results of Election of Office Bearers	After Approval of Cooperative Election Authority, New Delhi on Format 19 N	

"This is issued with the approval of Cooperative Election Authority.
The above schedule is subject to modification, if any, as ordered by the Cooperative Election Authority.

Sd-
Tmt. Rashmi Siddharth Zagade, IAS.,
Date: 29/05/2026 DISTRICT COLLECTOR/ RETURNING OFFICER

NOTICE OF LOSS OF SHARE CERTIFICATE

APOLLO HOSPITALS ENTERPRISE LIMITED
(FOR CLAIM FROM IEPF AUTHORITY)

Pursuant to Rule 8 of the Investor Education and Protection Fund (Accounting, Audit, Transfer and Refund) Rules, 2016, NOTICE is hereby given that share certificates for **400** equity shares of **Apollo Hospitals Enterprise Limited,** standing in the name of the late. **KSHITINDRA NARAYAN DAS** and bearing the following distinctive numbers, has been lost. I request the Company to issue a duplicate share certificate in lieu thereof and also effect the transmission of said equity shares in my name.

Folio No.	Name of Shareholder(s)	No. of Shares	Share Certificate No(s)	Distinctive Nos. From	Distinctive Nos. To
3880	KSHITINDRA NARAYAN DAS	400	353881	5479595	5479994

Any person who has a claim in respect of the said securities should lodge such claim with evidence to the Company, at its Registered Office, **M/s. Apollo Hospitals Enterprise Ltd, Secretarial Department, Ali Towers IIIrd Floor, No.55, Greams Road, Chennai-600 006.** Email: investor.relations@apollohospitals.com or to its Share Transfer Agents, Integrated Registry Management Services Private Limited, "Kences Towers", 2nd Floor, No.1 Ramakrishna Street, North Usman Road, T Nagar, Chennai – 600 017, Email: srirams@integratedindia.in within 15 days publication of this notice, else the Company shall proceed to settle the claim in favour of the registered holder(s)/claimant. The Company shall not entertain any claim thereafter. Any person dealing with the above said shares will be doing so at their own risk.

Place: **MEGHALAYA** Name of the claimant.
Date :**27/05/2026** **RISHAN RAPSANG**

Address & Email id of the claimant: -
Address: **Community Hall Jaiaw Langsning Shillong (Mb), East Khasi Hills Lewduh Meghalaya – 793002**
Email id: **rishanrapsang1956@gmail.com**

கடன் மீட்பு தீர்ப்பாயம் எண். II, மும்பை

எம்டிஎன்எல் பவன், 3வது தளம், ஸ்ட்ராண்ட் ரோடு, அப்போலோ பந்தர், கொலாபா மார்க்கெட், கொலாபா, மும்பை 400005.

அசல் விண்ணப்பம் எண். 1090 / 2023

சம்மன்

Exh. No.2

ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா ....**விண்ணப்பதாரர்**

எதிர்

மந்தர் பலிராம் நாயக் மற்றும் மற்றொருவர் ....**பிரதிவாதிகள்**

அசல் விண்ணப்பம் (O.A.) எண் 1090 / 2023 ஆனது, 03/10/2024 அன்று மாண்புமிகு தலைமை அதிகாரியின் முன்பாக பட்டியலிடப்பட்டதால்;

ரூ.29,76,176/– (ரூபாய் இருபத்தி ஒன்பது லட்சத்து எழுபத்தி ஆறாயிரத்து நூற்று எழுபத்தி ஆறு மட்டும்) கடனை வசூலிப்பதற்காக உங்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இச்சட்டத்தின் பிரிவு 19(4)–ன் கீழ் (ஆவணங்களின் நகல்கள் மற்றும் பலவற்றுடன் கூடிய விண்ணப்பம்), இந்த மாண்புமிகு தீர்ப்பாயம் சம்மன் அறிவிப்பை வழங்கியுள்ளதால்;

சாதாரண முறையில் சம்மனை வழங்க முடியாத காரணத்தால் மற்றும் மாற்று சேவைக்கான விண்ணப்பம் இந்த மாண்புமிகு தீர்ப்பாயத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளதால்;

இச்சட்டத்தின் பிரிவு 19–இன் துணைப் பிரிவு (4)–இன் படி, பிரதிவாதியான உங்களுக்கு கீழ்க்கண்டவாறு உத்தரவிடப்படுகிறது: –

(i) சம்மன் வழங்கப்பட்ட 30 (முப்பது) நாட்களுக்குள், கோரப்பட்ட நிவாரணம் ஏன் வழங்கப்படக்கூடாது என்பதற்கான காரணத்தைக் காட்ட வேண்டும்.

(ii) அசல் விண்ணப்பத்தின் வரிசை எண் 3A–ன் கீழ் விண்ணப்பதாரரால் குறிப்பிடப்பட்ட சொத்துக்கள் மற்றும் சொத்துக்கள் அல்லாத பிற சொத்துக்கள் அல்லது விவரங்களை வெளிப்படுத்த வேண்டும்.

(iii) அசல் விண்ணப்பத்தின் வரிசை எண் 3A–ன் கீழ் வெளிப்படுத்தப்பட்ட பாதுகாக்கப்பட்ட சொத்துக்கள் அல்லது அத்தகைய பிற சொத்துக்களை கையாள்வது அல்லது விற்பனை செய்வதிலிருந்து நீங்கள் தடை செய்யப்படுகிறீர்கள்.

(iv) தீர்ப்பாயத்தின் முன் அனுமதி இல்லாமல், அசல் விண்ணப்பத்தின் வரிசை எண் 3A–ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது வெளிப்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பட்ட சொத்துக்கள், அடமான சொத்துக்கள் மற்றும்/அல்லது பிற சொத்துக்களை, தனது சாதாரண வணிகப் போக்கைத் தவிர, விற்பனை, குத்தகை அல்லது வேறு எந்த வழியிலும் நீங்கள் மாற்றக்கூடாது.

(v) சாதாரண வணிகப் போக்கில் பாதுகாக்கப்பட்ட சொத்து அல்லது பிற சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் விற்பனை வருமானத்திற்கு நீங்கள் கணக்குக் காட்ட கடமைப்பட்டவர் ஆவீர்கள், மேலும் அத்தகைய விற்பனைத் தொகையை, அத்தகைய சொத்துக்களின் மீது பாதுகாப்பு நலனைக் கொண்டுள்ள வங்கி அல்லது நிதி நிறுவனத்தில் பராமரிக்கப்படும் கணக்கில் செலுத்த வேண்டும்.

விண்ணப்பதாரருக்கு ஒரு நகலை அளித்து எழுத்துபூர்வமான அறிக்கையை தாக்கல் செய்யவும், மேலும் **27/07/2026 அன்று காலை 11.00 மணிக்கு** DRT–II–க்கு முன்பாக ஆஜராகவும் உங்களுக்கு உத்தரவிடப்படுகிறது, தவறினால் விண்ணப்பம் நீங்கள் இல்லாமலேயே விசாரிக்கப்பட்டு முடிவெடுக்கப்படும்.

பிப்ரவரி 2, 2026 அன்று, எனது கையொப்பம் மற்றும் இந்த தீர்ப்பாயத்தின் முத்திரையின் கீழ் வழங்கப்பட்டது.

முத்திரை

ஒப்பம்/–
பதிவாளர்
DRT–II, மும்பை

பிரதிவாதிகளின் பெயர் மற்றும் முகவரி:

1, திரு. மந்தர் பலிராம் நாயக்,
பிளாட் எண். 3 மற்றும் 4, யோகினி ரெசிடென்சி, விரார் புதிய சர்வே எண். 121, பழைய சர்வே எண். 13, ஹிஸ்ஸா எண். 44 மற்றும் 35, கோபாரி கிராமம், தாலுகா வசாய், பால்கர் மாவட்டம் 401202. **மற்றும்:** பிளாட் எண். 601, பெனின்சுலா பார்க், டிமார்ட் சாலை, விவா கல்லூரிக்கு எதிரில், விரார் மேற்கு, பால்கர் மாவட்டம் 401303.

மற்றும்: பிளாட் எண். ஏ/301, பாரடைஸ் டவர், கட்டிடம் எண். 3, 3வது தளம், விவா கல்லூரி அருகில், விரார் மேற்கு, பால்கர் மாவட்டம் 401303.

மற்றும்: பிளாட் எண். பி/304, சுசீலா ஹைட்ஸ், 3வது தளம், புதிய விவா கல்லூரி அருகில், விரார் மேற்கு, பால்கர் மாவட்டம் 401303.

2. M/s. **இந்துஜா ஹவுசிங் ஃபைனான்ஸ்**
27/A, டெவலப்ட் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை 600032.

PUBLIC NOTICE

NOTICE is hereby given that my client the owner of the vacant land bearing **Plot No.146, measuring an extent of 7200 square feet (3 Grounds),** Comprised in S.No.370 (part), as per Patta No.1966, Survey Nos.370/5A5, in the Layout known as **SEA VIEW,** in Old No.46, New No.43, Padur Village, Thiruporur Taluk, Chengalpattu District, hereinafter referred to as the **"Said Lands".** My client has purchased the Said Lands vide a Sale Deed dated 14.03.2005, registered as Doc.No.1473 of 2005, for a valuable sale consideration. My client has informed that following original documents, under which my client's predecessors-in-title had acquired title to the Said Lands, have been misplaced/lost:

1.Sale Deed dated 12.08.1966, registered as Doc.No. 2283 of 1966,
2.Sale Deed dated 12.04.2004, registered as Doc.No. 1324 of 2004

The general public is hereby informed that any person(s), other than my client, having any right / title / claim and/or interest of whatsoever nature in/to the Said Lands or the said documents must lodge their claim/s with the undersigned, together with complete documentary evidence/proof thereof, within **SEVEN (7) DAYS** from the date of publication of this notice, failing which, it will be presumed that no person(s), other than my client, has/have any right / title / claim and/or interest in/to the Said Lands or the documents

For and on behalf of my client
Mr.N.CHANDRASEKAR, Advocate
Office: No.1E, First Floor, No.609, Lakshmi Bhavan, Thousand Lights, Chennai – 600 006, Mob: 73056-41473

விவ்ரிடி அசெட் மேனேஜ்மெண்ட் பிரைவேட் லிமிடெட்

(முன்னர் விவ்ரிடி பண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் என்று அழைக்கப்பட்டது)

(CIN : U66300TN2003PTC052025)

பதிவு அலுவலகம் : பிரஸ்டீஜ் ஜக்ரியா மெட்ரோபாலிடன், எண்.200/1-8, 8வது தளம், பிளாக்-1, அண்ணா சாலை, சென்னை 600002.

மார்ச் 31, 2026 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகள்

[செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்), விதிகள் 2015ன் விதி 52(8) மற்றும் 52(4)]

(₹ லட்சங்களில்)

வ. எண்	விவரங்கள்	மார்ச் 31, 2026ல் முடிவடைந்த காலாண்டு (தணிக்கை செய்யப்பட்டது)	மார்ச் 31, 2025ல் முடிவடைந்த காலாண்டு (தணிக்கை செய்யப்படாதது)	மார்ச் 31, 2026ல் முடிவடைந்த ஆண்டு (தணிக்கை செய்யப்பட்டது)
1.	செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம்	6.00	10.05	8.00
2.	காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரி, தனிப்பட்ட மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு முன்)	0.71	3.51	0.97
3.	வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (தனிப்பட்ட மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு பின்)	0.71	3.51	0.97
4.	வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (தனிப்பட்ட மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு பின்)	0.54	3.44	0.73
5.	காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம் / (நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது)	0.54	3.44	0.73
6.	செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம்	8.58	8.58	8.58
7.	நிலுவையில் உள்ள கட்டாயமாக மாற்றக்கூடிய முன்னுரிமை பங்குகள்	NA	NA	NA
8.	ரிசர்வ்கள் (மறுமதிப்பீடு ரிசர்வ்கள் நீங்கலாக)	78.88	78.15	78.88
9.	பங்கு பிரீமியம் கணக்கு	65.96	65.96	65.96
10.	நிகர மதிப்பு	87.46	86.73	87.46
11.	செலுத்தப்பட்ட கடன் மூலதனம் / கடன் நிலுவை	NA	NA	NA
12.	நிலுவையிலுள்ள மீட்டெடுக்கக் கூடிய முன்னுரிமை பங்குகள்	NA	NA	NA
13.	கடன் பங்கு விகிதம்	NA	NA	NA
14.	ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒன்று ரூ.10/-) (தொடரும் மற்றும் கைவிடப்பட்ட செயல்பாடுகள்) 1. அடிப்படை 2. டைலூட்டட்	0.63 / -	4.01 / -	0.85 / -
15.	மீட்கக்கூடிய மூலதன ஒதுக்கீடு	NA	NA	NA
16.	மீட்கக்கூடிய கடன் பத்திர ஒதுக்கீடு	NA	NA	NA
17.	கடன் சேவை கவரேஜ் விகிதம்	NA	NA	NA
18.	வட்டி சேவை கவரேஜ் விகிதம்	NA	NA	NA

குறிப்பு :

1. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள், 2015ம் வருடத்தைய செக்யூரிட்டீஸ் அண்டு எக்சேஞ்சு போர்டு ஆஃப் இந்தியா (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்) விதிகளின், விதி 52ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் ஆகும். காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழு விவரம் பாம்பே ஸ்டாக் எக்ஸ்சேஞ்சின் இணையதளம் (BSE: www.bseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளம் (www.vivritiamc.com) ஆகியவற்றில் கிடைக்கும்.
2. செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்) விதிகள் 2015, விதி 52(4)ன் தொடர்புடைய தகவல்கள் ஸ்டாக் எக்சேஞ்(பிஎஸ்இ)க்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அது குறித்து (www.bseindia.com)ல் அணுகலாம்.

விவ்ரிடி அசெட் மேனேஜ்மெண்ட் பிரைவேட் லிமிடெட்டுக்காக
(முன்னர் விவ்ரிடி பண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் என்று அழைக்கப்பட்டது)
ஒப்பம்/–
இடம் : யூரோப் வினீத் சுகுமார்
தேதி : மே 29, 2026 நிர்வாக இயக்குனர்
DIN: 06848801

Veranda

வெராண்டா லேர்னிங் சொல்யூஷன்ஸ் லிமிடெட்

CIN: L74999TN2018PLC125880 Website: www.verandalearning.com Telephone: 04446901007

பதிவு அலுவலகம்: ஜி.ஆர். காம்ப்ளக்ஸ், முதல் தளம், எண்.807-808, அண்ணா சாலை, நந்தனம், சென்னை - 600 035

31 மார்ச் 2026–ல் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகள் சுருக்கம்

வ. எண்.	விவரங்கள்	ஒருங்கிணைந்தது (ரூ.லட்சத்தில்),		
		31 மார்ச் 2026 முடிந்த காலாண்டு	31 மார்ச் 2026 முடிந்த ஆண்டு	31 மார்ச் 2025 முடிந்த காலாண்டு
1	செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம்	13,988.45	51,875.13	12,612.56
2	வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு அயிட்டங்களுக்கு முன்)	2,787.25	6,653.80	618.48
3	வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு அயிட்டங்களுக்கு பின்)	2,374.80	15,264.06	618.48
4	வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு அயிட்டங்களுக்கு பின்)	1,569.74	12,975.11	831.55
5	காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான (வரிக்கு பின்) லாபம்/(நஷ்டம்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கி உள்ளது)	1,601.32	12,936.65	878.53
6	செலுத்தப்பட்ட சம பங்கு மூலதனம் (ஒவ்வொன்றும் ரூ.10/- முக மதிப்பு)	9,616.96	9,616.96	7,439.62
7	மார்ச் 31, 2026 அன்று தணிக்கை செய்யப்பட்ட இருப்புநிலைக் குறிப்பில் காட்டப்பட்டுள்ளபடி இருப்புக்கள் (மறுமதிப்பீட்டு கையிருப்புகளைத் தவிர்த்து)	86,218.87		
8	ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒவ்வொன்றும் ரூ.10/–)			
	அடிப்படை	0.92	11.84	0.68
	பலமிழந்தது	0.91	11.73	0.66

குறிப்பு:

1. மேற்கண்ட தணிக்கை செய்யப்பட்ட நிதி முடிவுகள் தணிக்கைக் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டு, முறையே மே 30, 2026 அன்று நடைபெற்ற கூட்டத்தில் இயக்குனர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
2. சட்டப்பூர்வ தணிக்கையாளர்களின் தணிக்கை செய்யப்பட்ட நிதி முடிவுகள் (தனியானது மற்றும் ஒருங்கிணைந்தது) குறித்த முழுமையான தணிக்கை செய்யப்பட்ட நிதி முடிவுகள் மற்றும் மாற்றப்படாத சட்டப்பூர்வ தணிக்கையாளர்களின் அறிக்கை https://www.verandalearning.com/web/application/files/7017/8013/4038/Q42026.pdf-ல் கிடைக்கின்றன. அருகே கொடுக்கப்பட்டுள்ள க்யூஆர் (QR) குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் அதைப் பார்க்கலாம்.

வெராண்டா லேர்னிங் சொல்யூஷன்ஸ் லிமிடெட்டிற்காக
கல்பாத்தி S. சுரேஷ்
இடம் : ஸ்ரீநகர் நிர்வாக இயக்குனர் மற்றும் தலைவர்
தேதி : 30 மே, 2026 DIN: 00526480